




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 89 | 4 Pages | 28.10.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 89 | 4 பக்கங்கள் | 28.10.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்**
**என்குற்ற மாகும் இறைக்கு**

**விளக்கம்:**
**முன்னே தன் குற்றத்தைக் கண்டு நீக்கி பிறகு பிறருடையக் குற்றத்தை ஆராயவல்லவனானால், தலைவனுக்கு என்ன குற்றமாகும்.**

# வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த நடவடிக்கைக்கு எதிராக வருகிற 2ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டம்

சென்னை, அக்.28

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

மக்களாட்சி மாண்பைச் சிதைப்பதையும், ஜனநாயகத்தை சின்னாபின்னப் படுத்துவதையும் தொடர்ந்து தொய்வில்லாமல் செய்வதே மத்திய பாஜக அரசின் வழக்கமான பழக்கம் ஆகும். அதற்கு ஏற்ப தன்னாட்சி பெற்ற அமைப்புகளையும் தங்களது விருப்பத்துக்கு வளைத்து செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சர்ச்சைக்குரியதாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றன. முறையான தேர்தல், வெளிப்படையான தேர்தல், நேர்மையான தேர்தல், உண்மையான தேர்தல் நடத்துவதுதான் தேர்தல் ஆணையத்தின் ஒரே பணியாகும். ஆனால் சமீபகாலமாக தங்களுக்கு விருப்பமான உத்தரவுகள் மூலமாக சந்தேகத்துக்குரிய தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது. இதற்கு வெளிப்படையான உதாரணமாக பீகார் தேர்தல் அமைந்துள்ளது.

பீகார் மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தமானது, உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான சதியாக மட்டுமே அமைந்திருந்தது என்பதைக் கண்டோம். நம்பிக்கைக்குரிய தகவல்களின்படி பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள். பின்னர் சில லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு விசாரணையின் போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவையே தேர்தல் ஆணையம் மதிக்கவில்லை. பின்பற்றவில்லை. செயல்படுத்த தயாராக



இல்லை. இந்த ஜனநாயக விரோத செயலை செய்ய தூண்டியது மத்திய பாஜக அரசு ஆகும்.

இந்த நிலையில், SIR என்ற வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை அனைத்து மாநிலங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்திருந்தார். இன்றைய தினம் செய்தியாளர்களைச் சந்தித்த தலைமை தேர்தல் ஆணையர், தமிழ்நாட்டுக்கான தேதிகளை அறிவித்துள்ளார். நவம்பர், டிசம்பர் மாதங்களில் இதுபோன்ற பணிகளை நடத்துவது என்பது மிகமிகச் சிரமம் ஆகும்.

வடகிழக்கு பருவமழை பெய்து வரும் காலத்தில் வாக்காளர் பட்டியல் குறித்த இது போன்ற மிகப்பெரிய பணிகளைச் செய்வது சிரமம் ஆகும். நடைமுறை சாத்தியம் இல்லாத காலத்தை தேர்தல் ஆணையம் தேர்வு செய்துள்ளது. புகைப்படம் ஒட்டித்தர வேண்டும், பழைய வாக்காளர் பட்டியலை இணையத் தளத்தில் பார்த்து இணைக்க வேண்டும் என்று சொல்வது எல்லாம் பெரும்பான்மை வாக்காளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும்.

உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் ஆதார் அட்டையை முழுமையான ஆவணமாக ஏற்க மறுப்பது ஏன்? குடும்ப அடையாள அட்டைகளை முழுமையான ஆவணமாக ஏற்க வேண்டும் என்று நாங்கள் இதுவரை வைத்த கோரிக்கையை ஏற்க மறுப்பது ஏன்?. வாக்காளர் பட்டியல் சீரமைக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அதனை அவசர அவசரமாகச் செய்யக் கூடாது. கால அவகாசம் கொடுத்து செய்ய வேண்டும். நடைமுறைச் சிக்கல்கள் இல்லாமல் செய்ய வேண்டும்.

ஏப்ரல் மாதம் தேர்தலை வைத்துக் கொண்டு இப்போது இதனைச் செய்யத் தொடங்குவது சரியானது அல்ல. முறையானது அல்ல. எனவே வாக்காளர் பட்டியல் சிறப்பு சீர்திருத்தத்தை நாங்கள் எதிர்க்கிறோம். எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டம் இதனுள் இருக்கலாம் என சந்தேகப்படுகிறோம். பீகாரில் இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறிவைத்து இந்த நீக்கம் நடந்தன. பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் குற்றம்சாட்டினார்.

இது போன்ற எந்தச் சதியையும் தமிழ்நாடு அனுமதிக்காது. தமிழ்நாடு ஒன்று சேர்ந்து போராடும். போராட வேண்டும். இது தமிழ்நாட்டுக்கான பிரச்சினை ஆகும். தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் இயக்கங்களும் இதனை உன்னிப்பாக கண்காணித்து தடுத்தாக வேண்டும். எனவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள் பங்கேற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நவம்பர் 2 ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணி அளவில், தியாகராய நகரில் உள்ள "ஓட்டல் அகார்டில்" நடைபெற இருக்கிறது.

இதில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் அரசியல் வேறுபாடுகளை கடந்து பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அக்கூட்டத்தில் தலைவர்கள் வைக்கும் கோரிக்கைகள், ஆலோசனைகள் அடிப்படையில் நமது அடுத்த கட்ட செயல்பாடுகள் அமையும் என உறுதி அளிக்கிறோம். மக்களாட்சியையும், மக்களின் உரிமைகளையும், தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் மனதில் வைத்து அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒன்று சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பீகாரில் நாளை மறுநாள் பிரசாரம் செய்கிறார் ராகுல் காந்தி



பாட்னா, அக்.28

பீகார் சட்டசபை தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. எதிர்க்கட்சி கூட்டணியில், தேர்தல் டிக்கெட்டுகள் பணத்துக்கு விற்கப்பட்டதாக அதிருப்தியாளர்கள் குற்றம்சாட்டி வருகிறார்கள். இதுபோன்ற அதிருப்தியை சரிக்கட்டவும், காங்கிரஸ் கட்சிக்கு வியூகம் வகுக்கவும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் (அமைப்பு) கே.சி.வேணுகோபால், ராஜஸ்தான் முன்னாள் முதல்மந்திரி அசோக் கெலாட் உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பீகாரில் முகாமிட்டுள்ளனர் .இந்தநிலையில் பீகாரில் 2 நாட்கள் ராகுல்காந்தி பிரசாரம் செய்யவுள்ளார்.

இது தொடர்பாக பேசிய காங்கிரச் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால், "சாத் பண்டிகைக்குப் பிறகு எங்கள் பிரசாரம் தொடங்கவுள்ளது. அக். 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் ராகுல் காந்தி பிரசாரம் செய்யவுள்ளார். வாக்காளர்களை ஒருங்கிணைக்கும் வகையில் மல்லிகார்ஜுன கார்கே, பிரியங்கா காந்தி ஆகியோரும் பிரசாரத்தில் பங்கேற்கவுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

## முன்னாள் காதலனுடன் சேர்ந்து லிவ் இன் காதலனை கொலை செய்த இளம்பெண் டெல்லியில் பரபரப்பு

புதுடெல்லி, அக்.28

தலைநகர் டெல்லியின் காந்தி விகார் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 4வது மாடியில் கடந்த 6ந்தேதி இரவு தீ விபத்து ஏற்பட்டது. இதுகுறித்துதகவலறிந்துசம்பவஇடத்திற்குசென்றதீயணைப்புத்துறையினர், நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். பின்னர் தீ விபத்து ஏற்பட்ட வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, அங்கு ராம்கேஷ் மீனா(வயது 32) என்பவரின் சடலம் எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.அந்தஅடுக்குமாடிகுடியிருப்பில்உள்ளசி.சி.டி.வி.கேமராக்களை ஆய்வு செய்தபோது, தீ விபத்து ஏற்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு முகமூடி அணிந்த 2 நபர்கள் ராம்கேஷ் மீனாவின் வீட்டிற்குள் செல்வதும், பின்னர் சிறிது நேரம் கழித்து அவர்கள் வெளியே வருவதும் பதிவாகி இருந்தது. மேலும், அவர்களுடன் ஒரு பெண்ணும் வெளியே வந்தார்.

அந்த பெண் யார் என்பது குறித்து விசாரணை நடத்தியபோது, அவர் ராம்கேஷ் மீனாவின் லிவ்இன் காதலி என்பது தெரியவந்தது. இதையடுத்து அந்த பெண்ணை தேடிப்பிடித்து போலீசார் அவரிடம் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், ராம்கேஷ் மீனாவை தனது முன்னாள் காதலனுடன் சேர்ந்து கொலை செய்ததாக அந்த பெண் ஒப்புக்கொண்டார்.

முன்னதாக ராம்கேஷ் மீனா தனது அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுத்து வைத்துக் கொண்டு தன்னை மிரட்டி வந்ததாக அந்த பெண் கூறியுள்ளார். இந்த விவகாரம் குறித்து தனது முன்னாள் காதலரிடம் கூறியபோது, அவர்தான் ராம்கேஷ் மீனாவை தீர்த்துக் கட்ட வேண்டும் என ஆலோசனை வழங்கியதாகவும், திட்டமிட்டமிட்டபடி சம்பவத்தன்று ராம்கேஷ் மீனாவை கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு, பின்னர் வீட்டில் இருந்த கியாஸ் சிலிண்டரை திறந்து விட்டு தீ விபத்து ஏற்படுத்தியதாகவும் அந்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், போலீசார் அந்த பெண்ணின் முன்னாள் காதலர் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த மற்றொரு நபர் ஆகிய இருவரை கைது செய்தனர். தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 2 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிய நண்பன்... பணத்தை திருப்பி தராததால் படுகொலை

பெங்களூரு, அக்.28

கர்நாடக மாநிலத்தை சேர்ந்த மஞ்சுநாத் கவுடர்(வயது 30) என்பவர், கடந்த வாரம் தனது நண்பரான தயானந்த் குண்ட்லூர் என்பவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியுள்ளார். பணத்தை வாங்கியபோது 7 நாட்களில் கடனை திருப்பி செலுத்திவிடுவதாக மஞ்சுநாத் உறுதியளித்ததாக கூறப்படுகிறது.

ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் மஞ்சுநாத் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. இந்நிலையில், தனது பணத்தை தருமாறு மஞ்சுநாத்திடம் நேற்று இரவு தயானந்த் கேட்டுள்ளார். அப்போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த தயானந்த், தன்னிடம் இருந்த அரிவாளை எடுத்து மஞ்சுநாத்தை வெட்டிவிட்டு தப்பியோடினார்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த மஞ்சுநாத், உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, தயானந்த் காவல்நிலையத்தில் சரணடைந்து தனது நண்பனை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். அவர் மீது போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தனித்திறமையில் ஒற்றைக் கம்பு சுற்றுவதில் சிறந்த வீரர் பரிசு பெற்ற மாணவன்

சென்னை ராயபுரத்தில் மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டி, நூர்முகமது & லாலா மியான் சிலம்பம் பள்ளியில் 156 ஆவது ஆண்டு விழா மற்றும், கலை மாமணி ஷாஜி. L. ஜான்பாவா அவர்களின் 14 ஆவது ஆண்டு நினைவு விழா மற்றும் சென்னையில் நூர்முகமது & லாலா மியான் சிலம்பம் பள்ளியின் 10வது ஆண்டு விழா முப்பெரும் விழாவை முன்னிட்டு ஆடவர்/ மகளிர் காண மாவட்ட அளவிலான மினி, சப் ஜூனியர், சப் ஜூனியர், ஜூனியர், மற்றும் சீனியர், மாபெரும் சிலம்பம் போட்டு சிறப்பாக நடைபெற்றது.

இதில் பத்து வயதுக்குட்பட்டோருக்கு தனித்திறமை ஒற்றைக் கம்பு தனி திறமை போட்டியில் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். அதில் சிறப்பாக சிலம்பம் சுற்றி, மிகச்சிறந்த சிலம்பம் சுற்றும் விளையாட்டு வீரர்என்றபரிசினைவென்ற K.N.உபேந்தர் என்ற மாணவன். சிறப்பாக விளையாடிய K.N.உபேந்தர் என்ற மாணவனுக்கு திரு, வி, க, நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தமிழ்நாடு சிறை துறை அதிகாரி ஐ ஜி கனக ராஜ் மற்றும் தமிழ்நாடு சிலம்பாட்ட கழகம் சென்னை மாவட்ட செயலாளர் செந்தில் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு, கோப்பை மற்றும் சிலம்பம் சுற்றும் கம்பினை பரிசாக வழங்கி கௌரவித்தனர் மேடையில் மாணவனை



கௌரவிக்கும்போது சிலம்பம் பயிற்சி MASTER முகமது ஹபிப் அவர்கள் உடன் இருந்தார்.

## திருவாரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் சார்ந்த பயிற்சிக்கு விண்ணப்பிக்க அக்டோபர் 31ந்தேதி கடைசி நாள்

திருவாரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் சார்ந்த பயிற்சிக்கு விண்ணப்பிக்க அக்டோபர் 31ந்தேதி கடைசி நாள் அக்26,

திருவாரூர், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் சார்ந்த பயிற்சிக்கு விண்ணப்பிக்க வருகிற 31ந்தேதி கடைசி நாள் என கலெக்டர் மோகன் சந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு என்னவென்றால், மருத்துவம் சார்ந்த படிப்புகள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரியில் படிப்பு மற்றும் ஆண்டின் மருத்துவம் சார்ந்த பாடப் பிரிவுகளில் மாவட்ட அளவில் தகுதியான நபர்களுக்கு தகுதியான நபர்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த படிப்பிற்கான கல்வித் தகுதி 10 மற்றும் 12வது வகுப்புகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறிப்பாக 12ஆம் வகுப்பு அறிவியல் பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மாணவர் சேர்க்கை

கார்டியோ டெக்னீசியன் (பெண்கள் மட்டும்), இ.சி.ஜி. டெக்னீசியன், எம்.ஆர்.ஐ கேர் டெக்னீசியன், ரெஸ்பிரேட்டரி டெக்னீசியன், டயாலிசிஸ் டெக்னீசியன், பிளட் பேங்க் டெக்னீசியன், ஆப்ரேஷன் தியேட்டர் டெக்னீசியன் (ஆண்கள் மட்டும்), மற்றும் பப்ளிக் ஹெல்த் கேர் கோர்ஸ், டி.எம்.டி. கேர் டெக்னீசியன், கோர்ஸ் போன்ற ஒரு வருடத்திற்கும் குறைந்த கோர்ஸ்கள் நடைப்பெற்று கொண்டிருக்கிறது. இதற்கான அனுபவ வயது வரம்பு 17 முதல் 25வயது இல்லை. மேற்கண்ட படிப்புக்கான கட்டணம் ரூ.150 ஆகும். அரசு பள்ளியில் தமிழ் வழியில் படித்த மாணவ, மாணவிகளுக்குதமிழ்புதல்வன், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் ரூ.1000 விதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 31ந்தேதிக்குள் எனவே பயிற்சி விரும்பும் மாணவர்கள்திருவாரூர் திறன் பயிற்சி அலுவலர், திருவாரூர்

மருத்துவ கல்லூரி துணை முதல்வரை தொடர்பு கொண்டு வரும் 31ந்தேதிக்குள் (வெள்ளிக்கிழமை) பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# எங்க கோவணத்தையும் இழக்கணுமா.. அமைச்சர் துரைமுருகன் இப்படி பேசலாமா..தலைவர் செல்வப்பெருந்தகை ஆவேசம்




சென்னை செம்பரம்பாக்கம் ஏரியில் அக்டோபர் 22ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

ஒரு அயோக்கியப் பையன்...

அன்றே, செம்பரம்பாக்கம் ஏரி இருக்கும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி எம்.எல்.ஏவும், தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைவருமான செல்வப்பெருந்தகை, தண்ணீர் திறந்து விடுவது பற்றி தன்னிடம் தெரிவிக்காததைக் குறிப்பிட்டு, ``மக்கள் பிரதிநிதிக்கு ஒரு வார்த்தை சொன்னா கெட்டா போயிடும்.

இந்தத் துறை யார் கட்டுப்பாட்டுல இருக்குனே தெரியல... இவர்களெல்லாம் திறக்கக் கூடாது... தொடக் கூடாது... இந்தத் துறை வெறிப்பிடித்துப்போய் கிடக்கிறது.

ஒரு அயோக்கியப் பையன் இந்தத் துறையில் உட்கார்ந்திருக்கிறான்" என்று காட்டமாகப் பேசியிருந்தார்.

அவனாலதான் இந்தத் தொல்லை

இதுகுறித்து ராணிப்பேட்டையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ``செல்வப்பெருந்தகை போன்ற அரசியல் தலைவர் இப்படி சொன்னதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

உண்மை என்னனு தெரிஞ்சு பேசணும். பருவமழை முடிந்து அடுத்த பருவமழை தொடங்கும்போது மேட்டூர் அணை நிரம்பியிருந்தால்தான் முதல்வர் வந்து திறப்பார்.

இதுமாதிரி சின்ன சின்னதா ஆற்று குறுக்க கட்டியிருக்கிறதலாம் அதுபோல பண்ண மாட்டார்கள். கூப்பிடணும்னா கூப்பிடலாம் அது தப்பில்ல. ஆனா யாரும்கூப்பிடமாட்டாங்க.

அங்க ஒருத்தன் இருக்கான், இங்க ஒருத்தன் இருக்கான் என்கிறார். நான் சொல்றேன், அங்க ஒருத்தன் இருக்கான். அவனாலதான் இந்தத் தொல்லை" என்று கூறியிருந்தார். இப்படி பேசலாமா...

இந்த நிலையில் இன்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த செல்வப்பெருந்தகை, ``அவர் பேசுனதுதான் எனக்கு வருத்தமாக இருக்கு. ஒரு பொறுப்புள்ள அமைச்சர், மூத்த அமைச்சர், மாபெரும் இயக்கத்தின் பொதுச் செயலாளர்இப்படி பேசலாமா...

அந்தப் பகுதியின் இந்தியா கூட்டணியின் தலைவரோடு பேசிட்டு வரும்போது அத ஒருத்தர்வீடியோ எடுத்து போட்டார். அதுக்கு நான் பொறுப்பாக முடியாது.

என்னைக் கேட்டுட்டு திறங்கனு சொல்லல, எனக்கு ஏன் தகவல் சொல்லலனுதான் கேக்றேன். இந்த மாதிரி திறக்கப்போறாங்க ஆத்து பக்கம் மக்கள் போக வேணாம்னு எச்சரிக்கை பண்றதுக்காக கேக்றேன்.

கேட்டதே குற்றம்னு அவர் (துரைமுருகன்) குற்றச்சாட்டு சொன்னா அதுக்கென்ன பதில். அப்படி சொல்ல கூடாது. அதிகாரிகளைக் கேட்பதற்கே அவரால் பொறுத்துக்கொள்ள முடியலனா நான் என்ன பண்ண முடியும்.

நான் வரம்பை மீறி பேசியிருந்தா அவர் கேக்கலாம். அன்னைக்கு அதிகாரிக்கு போன் போட்டா 5 மணி நேரமா எடுக்கல, அடுத்தநாளும் போன் எடுக்கல. எம்.எல்.ஏ, எம்.பிக்கு சொல்லணும்னு கட்டாயமில்லனு சொல்றாங்க. நாளைக்கு வெள்ளம் வந்துருச்சுனா திறந்துவிட்ட அந்த இன்ஜினியரா மக்கள் கிட்ட போயிட்டுநிக்கபோறாரு... நான்தான் போய் நிக்க போறேன்.

திறக்குறதுல வெளிப்படைலாம் இல்லனு சொல்ற அதிகாரிகளை மக்கள் பிரதிநிதி கேட்ககூடாதுனு சொல்றது எந்த விதத்துல நியாயம்?

இதுக்கு என்னென்னமோ சாயம் பூசுறீங்களே தப்பில்லயா. எங்களுக்கு இருக்குற சுயமரியாதையே கோமணம்தான் அதுகூட விட்றணுமா? என்ன அர்த்தத்துல அதிகாரிகள் கேக்கறாங்க. நான் என்ன தவறா கேட்டேன். முதல்வருக்கும் களங்கம் ஏற்படக்கூடாதுனுதான் அமைதியா இருக்கோம்! நான் ஒரு எம்.எல்.ஏ பொறுத்துட்டு போயிட்றேன். வேற யாராவது பொறுத்துட்டு போவாங்களா... இது கட்டாயமிலனா கீழடி வரலாற்றைப் பற்றி நீங்க பேச முடியுமா.. அகழ்வாராய்ச்சி பற்றி பேச முடியுமா... நீர் மேலாண்மை கீழடில இருந்து ஆரம்பிக்குது.

மக்கள் பிரதிநிதிகளை விட அதிகாரிகள் மேலானவர்களா... கூப்பிடாதனு யாரோ அதிகாரிகள் மேல இருந்து சொல்றாங்க... அதிகாரிகள் சொல்றத இந்தத் துறை ஏன் கேக்குது. அதை சீர்தூக்கி பாக்கணும்ல. அதான் என் வேதனை.

ஊராட்சி மன்ற தலைவர், சேர்மன், அப்பகுதி தி.மு.க ஒன்றிய செயலாளர், நகராட்சி தலைவர், மாவட்ட கவுன்சிலர், ஒன்றியகவுன்சிலர் எல்லோரும் பட்டியலினத்தவர். அவங்க எல்லோரும்ஏன்எங்களகூப்பிடலனு கேக்றாங்க. இதை அதிகாரிகளும் புரிஞ்சிக்க மாட்றாங்க... மூத்த அமைச்சருக்கும் சொல்லாம விட்ருகாங்க. அதிகாரிகள் ஒன்னு ரெண்டு பேர் அப்டியிருக்காங்க.

முதல்வருக்கும் களங்கம் ஏற்படக்கூடாதுனுதான் அமைதியா இருக்கோம். உடனே தி.மு.க ஆட்சி பட்டியலினத்துக்கு எதிரானதுனு திசைதிருப்பாதிங்க. முதல்வர் அதில் கண்ணும் கருத்துமா இருக்காரு.

2015ல் ஜெயலலிதா முதலமைச்சரான இருக்கும் போது திறந்துவிட்டாங்க சென்னை நிறைஞ்சு போச்சு. அதிமாதிரியான மக்கள் பிரதிநிதிகளைத்தான் விரும்புறாங்களா (அதிகாரிகள்)? ஒரு மூத்த அமைச்சர் இதையும் நகைச்சுவையாக எடுத்துக்கிட்டது வருத்தமளிக்கிறது" என்று கூறினார். "இவர்களெல்லாம் திறக்கக் கூடாது... தொடக் கூடாது... என நினைக்கிறீர்களா?" கொந்தளித்த செல்வப்பெருந்தகை.

# தேனி மாவட்டம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இன்றி நோயாளிகள் அவதி



தேனி மாவட்டம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் கடந்த சில நாட்களாக மருத்துவர்கள் வராததால், சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

அன்றாடம் நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சைக்காக இந்த மருத்துவமனைக்கு வருகிறார்கள். ஆனால் மருத்துவர்கள் குறைவாக இருப்பதால், பலரும் நேரத்துக்கு சிகிச்சை பெற முடியாமல் திரும்பி செல்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதை கண்டித்துள்ளதுடன், உடனடியாக போதுமான மருத்துவர்கள் நியமனம் செய்து நோயாளிகள் அவதியின்றி சிகிச்சை பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுருளி அருவியில் குளிக்க தடை - பத்தாவது நாளாக தொடர்கிறது



தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளி அருவியில் நீர்வரத்து சீராகாததால், பத்தாவது நாளாகவும் சுற்றுலாபயணிகளுக்குகுளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

சமீபத்திய கனமழையால் அருவியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு குறைந்தபோதிலும், நீர்வரத்து இன்னும் நிலைபெறாத நிலையில் பாதுகாப்பு காரணங்களுக்காக வனத்துறை இந்தத் தடையை தொடர்ந்துள்ளது.

அருவியை பார்வையிட வந்த சுற்றுலா பயணிகள், குளிக்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர். நீர்வரத்து சீராகிய பின் மட்டுமே பொதுமக்களுக்கு குளிக்க அனுமதி வழங்கப்படும் என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# திண்டுக்கல்: பேருந்து நிலையத்தில் அமர்ந்திருந்த முதியவர் தடுமாறி விழுந்து உயிரிழப்பு போலீஸ் விசாரணை




திண்டுக்கல், அக்.26

ராமநாதபுரம் மாவட்டம் கமுதியைச் சேர்ந்த முதியவர் முத்துராம். குடும்பத்தினர் யாரும் இல்லாமல் தனியாக வசித்து வந்த முத்துராம், வேடச்சந்தூரில் உள்ள ஒரு பூக்கடையில் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். வேலை முடிந்த பிறகு இரவு நேரங்களில் வேடச்சந்தூர் பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் நிழற்குடையில் தங்கி இருந்துள்ளார்.

இவருக்கு மது அருந்து பழக்கம் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், இன்று மது அருந்திவிட்டு பயணிகள் நிழற்குடையின் கீழ் முத்துராம் அமர்ந்திருந்தார். அப்போது திடீரென நிலை தடுமாறி கீழே விழுந்ததில், மூத்துராமின் மூக்கில் அடிபட்டு ரத்தம் கொட்டியுள்ளது. இதில் மயக்கமடைந்த முத்துராம், சிறிது நேரத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது குறித்து தகவலறிந்து வந்த போலீசார், முத்துராமின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வேடச்சந்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இது தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பேருந்து நிலையத்தில் முதியவர் தடுமாறி விழுந்து உயிரிழந்த சம்பவம் வேடச்சந்தூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 1,03,166 வண்டல் சேகரிப்புத் தொட்டிகளில் தூர் வாரும் பணிகள் தீவிரம்: சென்னை மாநகராட்சி



சென்னை, அக்.28

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:


தமிழ்நாடு முதல்அமைச்சரின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகள், கால்வாய்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாருதல் மற்றும் கழிவுகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மழைநீர் வடிகால்வாய்களில் மழைநீர் தடையின்றி செல்வதை உறுதி செய்வதற்கும், சாலைகளில் மிதக்கும் கழிவுகள் வடிகால்வாய்களில் நுழைவதைத் தடுப்பதற்கும், வண்டல் மண் சேகரிக்கவும் மழைநீர் வடிகால்வாய்களில் 5 மீ. இடைவெளியில் 1,03,166 வண்டல் வடிகட்டித் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வண்டல் வடிகட்டித் தொட்டிகளின் மூடி குப்பைகளை தொட்டியில் செல்வதைத் தடுத்து மழைநீர் மட்டும் தொட்டியில் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வண்டல் சேகரிப்புத் தொட்டிகளில் வண்டல்மண் சேகரிக்கப்படுகிறது. வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலிருந்து இரண்டு குழாய்கள் மூலம் மழைநீர் தங்குதடையின்றி மழைநீர் வடிகால்களில் சீராகச் செல்லும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே இந்த வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் வண்டல்கள் மற்றும் குப்பைகள் அகற்றி முதற்கட்டமாக சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளிலும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரி வண்டல் மண் அகற்றும் பணிகள் மழையினை முன்னிட்டு தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் காணாமல் போன 16 வயது சிறுமி ஓசூரில் மீட்பு காவல் நிலையத்தில் இருந்து மீண்டும் தப்பியோட்டம்



கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பேருந்து நிலையில், 16 வயது சிறுமி ஒருவர்தனியாகசுற்றித்திரிந்த நிலையில், அப்பகுதி மக்கள்இது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சிறுமியை ஓசூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையின்போது, சிறுமி சென்னை கொரட்டூர் பகுதியை சேர்ந்தவர் என்பதும், 10 நாட்களுக்கு முன்பு சிறுமி காணாமல் போனது குறித்து அவரது தந்தை ஏற்கனவேகாவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்பதும் தெரியவந்தது. இதையடுத்து சிறுமியின் தந்தைக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து கொரட்டூர் போலீசார் சிறுமியின் தந்தையை அழைத்துக் கொண்டு ஓசூர் சென்றனர்.

இதனிடையே, ஓசூர் காவல் நிலையத்தில் உணவு அருந்திவிட்டு கை கழுவச் செல்வதாக கூறி வெளியே சென்ற சிறுமி, அங்கிருந்து தப்பியோடினார். இதனால் அதிர்ச்சியடைந்த போலீசார் சிறுமியை தற்போது தீவிரமாக தேடி வருகின்றனர். ஓசூர் பகுதி தமிழகத்தின் எல்லையில் அமைந்திருக்கும் சூழலில், சிறுமி அண்டை மாநிலங்களுக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டாரா? என்ற கோணத்தில்போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். காவல் நிலையத்தில் இருந்து சிறுமி தப்பியோடிய சம்பவம் ஓசூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தண்ணீர் வாளியில் விழுந்து மூழ்கிய ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழப்பு




சென்னை, அக்.28

சென்னை தேனாம்பேட்டை ஜோகி தோட்டத்தை சேர்ந்தவர்கள் ஸ்ரீராம் சந்தான லட்சுமி. இவர்களுக்கு ஒன்றரை வயதில் தனுஷ் என்ற ஆண் குழந்தை இருந்தது. பக்கத்து வீட்டில் வசிக்கும் உறவினரான அலமேலுவுக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அவரை பார்க்க சந்தானலட்சுமி குழந்தையுடன் சென்றுள்ளார்.

அப்போது குழந்தை தனுஷ் அலமேலு வீட்டில் குளியல் அறையில் இருந்த தண்ணீர் வாளியில்தவறிவிழுந்துள்ளது. இதனால் பதறிப் போன சந்தான லட்சுமி குழந்தையை மீட்டு தேனாம்பேட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தார். பின்னர் கிரீம்ஸ் ரோட்டில் உள்ள தனியார் குழந்தைகள் நல ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் குழந்தை சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தது. இது பற்றி தேனாம்பேட்டை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

# தென்காசி: அரசு பேருந்து மின்கம்பத்தில் மோதி விபத்து 30 பயணிகள் காயம்



தென்காசி, அக்.28

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்வாசுதேவநல்லூர் சாலையில் அரசு பேருந்து ஒன்று சுமார்30க்கும்மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. அந்த பேருந்து கண்டிகைப்பேரி அருகே வந்தபோது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த மின்கம்பத்தில் மோதி விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 30 பயணிகளுக்கு படுகாயம் ஏற்பட்டது. அவர்களை அங்கிருந்த பொதுமக்கள் உடனடியாக மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பந்தப்பட்ட சாலையில் பேருந்துகள் அதிவேகத்துடன் செல்வதாகவும், இதன் காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த சம்பவம் குறித்து கரிவலம்வந்தநல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பீகார் தேர்தலில் நீதி வெல்ல வேண்டும்; ஜனநாயகம் வெல்ல வேண்டும் கனிமொழி பேட்டி

நெல்லை, அக்.28

நெல்லையில் திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர்கனிமொழி செய்தியாளர்சந்திப்பில் கூறியதாவது:

மத்திய அரசின் ஆய்வு குழு இந்த முறையாவது மாநில அரசு கேட்கும் நிவாரணத்தை வழங்க வேண்டும். ஒவ்வொரு முறையும் தமிழக முதல்அமைச்சர் கேட்கும் நிவாரணத்தை கொடுக்காமல் மத்திய அரசு கிள்ளிக் கொடுக்கிறது. விவசாயிகளுக்கு மத்திய அரசின் நிவாரணம் கிள்ளிக் கொடுப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த பயனும் இல்லை.

விவசாயிகளின் துன்பத்தையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாத வகையில் நிவாரணத்தை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

மக்களுக்கு உண்மையிலேயே உதவி செய்யக்கூடிய எண்ணத்தோடு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். பீகார் தேர்தலை பொறுத்திருந்து பார்ப்போம், நீதி வெல்ல வேண்டும், ஜனநாயகம் வெல்ல வேண்டும் என்பதுதான் அத்தனை பேரின் எதிர்பார்ப்பு. சிறப்பு திருத்தத்தால் தமிழகத்தில் வாக்குரிமை பறிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.2000 கோடி செலவில் 200 தடுப்பணைகள்: சொன்னீங்களே செஞ்சீங்களா நயினார் நாகேந்திரன்

சென்னை, அக்.28

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ரூ. 2000 கோடி செலவில் 200 தடுப்பணைகள் கட்டப்படும் என்று தேர்தல் வாக்குறுதி எண் 90இல் சொன்னீங்களே, செஞ்சீங்களா முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினே? மருதையாற்றில் திருமானூர், தா.பழூர், கொள்ளிடம் குருவாடி, புளியங்கோம்பை அருகில் காட்டாறு, குண்டேரி, புஞ்சைபுகலூர், நன்னியூர், குளித்தலை ஆகிய இடங்களில் தடுப்பணை கட்டப்படும் என்று கொடுத்த வாக்குறுதியைக் கிணற்றில் போட்ட கல்லாகக்கிடப்பில் போட்டதால் இன்று பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் வறட்சியில் தவித்து வருகின்றன. திமுகவின் தேர்தல் வாக்குறுதியை நம்பி ஏமாந்து, தற்போது தாகத்திற்கும் விவசாயத்திற்கும் தண்ணீர் கிட்டாமல் மக்கள் தள்ளாடும் வேளையில், 99 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றிய பொற்கால ஆட்சி இது என்று முழங்குவது வெட்கக்கேடானது. கொடுத்த வாக்குறுதியை வீசியெறிந்து, தாகத்தில் தவிக்க விட்ட இந்த திமுக அரசு தமிழகத்தில் இருந்து தூக்கியெறியப்படும் நாள் வெகுதூரமில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனிச்சம்பாளையம் செல்வ விநாயகர் எல்லம்மாள் கோவில் கும்பாபிஷேகம்



நாமக்கல் அக்.28

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா அனிச்சம்பாளையத்தில் செல்வ விநாயகர் மற்றும் எல்லம்மாள் கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் நடைபெற்றது. காலை 8 மணிக்கு கோபுர கலசம் வைத்தல், விமானங்கள் கண் திறப்பு, விக்ரகங்கள் பிரதிஷ்டையும், பொது மக்கள் காவிரி ஆற்றிற்கு புனித நீர் எடுத்து வரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக நேற்று காலை யாக வேள்வி, கடம் புறப்பாடு நடைபெற்றது. காலை 7.45 மணிக்கு மேல் 8.45 மணிக்குள் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓதி கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்தனர்.

அதனை தொடர்ந்து மூலவ மூர்த்திகளான செல்வ விநாயகர், எல்லம்மாள், பூர்ணா, புஷ்கலா சமேத அடைக்கலம் காத்த ஐயனாரப்பன் மற்றும் கருப்பண்ணசாமிக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 18 வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

இதில் அனிச்சம்பாளையம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ‘த.வெ.க.வை விமர்சிப்பதை பா.ஜ.க. தவிர்க்கிறதா?’ வானதி சீனிவாசன் பதில்



கோவை, அக்.28

கோவை விமானநிலையத்தில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.வானதிசீனிவாசன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். அதில் அவர்கூறியிருப்பதாவது;

“கரூர் துயர சம்பவத்திற்கு பிறகு த.வெ.க. தலைவர் விஜய் கரூருக்கு போயிருக்கவேண்டுமா? இல்லையா? என்பது குறித்து அவர்களின் கட்சிக்காரர்கள்தான் பதிலளிக்க வேண்டும். அவர் பாதிக்கப்பட்டவர்களை சந்திக்கிறார் என்பதே நல்ல விஷயம்தான். சி.பி.ஐ. விசாரணை நடந்து வரும் நிலையில், உண்மை வெளிவரும் போது நீதி கிடைப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது.

எந்த கட்சியையும் விமர்சிப்பதை நாங்கள் தவிர்க்கவில்லை. அனைத்து கட்சிகள் மீதும் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை நாங்கள் முன்வைக்கிறோம். அதுமட்டுமின்றி, விமர்சனம் செய்வதால் மட்டுமே கூட்டணி அமையாது என்று சொன்னால், எந்த கட்சியும் எந்த கட்சியுடனும் கூட்டணி அமைக்கவே முடியாது. ஏனெனில் ஒவ்வொரு கட்சியும் தேர்தலுக்காகவே கூட்டணியை சேர்க்கிறார்கள்.

ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கை, சித்தாந்தம் இருந்தாலும், தேர்தல் என்று வரும்போது யார் வெற்றி பெறக்கூடாது? என்ற கேள்வியே பிரதானமாகி விடுகிறது. மத்தியில் பா.ஜ.க. வரக்கூடாது என்று மற்றவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்வார்கள். மற்றபடி அவர்களுக்குள் பொதுவான விஷயம் எதுவும் இருக்காது.

கோவையில் இருந்து முக்கால் மணி நேர தூரத்தில் பாலக்காடு இருக்கிறது. அங்கு காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் எதிரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குள் அதிகாரப் போட்டி இருக்கிறது. அதே சமயம், இந்த பக்கம் வந்துவிட்டால் இரண்டு கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து கொள்கிறார்கள். மதசார்பற்ற கூட்டணி என்று சொல்கிறார்கள். இது என்ன அரசியல்?

காங்கிரஸ் கட்சியைப் பற்றி தி.மு.க. பேசாததா? இன்று அவர்கள் கூட்டணியில் இருக்கிறார்கள். முன்பு கரூரில் செந்தில்பாலாஜி குறித்து கடுமையாக விமர்சித்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது கட்சியில் செந்தில்பாலாஜி சேர்ந்த பிறகு அவரை தியாகி என்கிறார்.

பா.ஜ.க. யாருடன் கூட்டணி வைக்க வேண்டும் என்பது குறித்து நான் எதுவும் சொல்ல முடியாது. அது தேசிய தலைமை சொல்ல வேண்டிய முடிவு. எந்த கூட்டணியை தேசிய தலைமை அறிவித்தாலும், அதற்கு ஏற்றவறு கட்சிக்காரர்களாகிய நாங்கள் வேலை செய்வோம்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 114 வயது சிறுமிகளுக்கு இலவச புற்றுநோய் தடுப்பூசி அமைச்சர் மா.சுப்பிரமணியன்




சென்னை, அக்.28

சென்னை தீவுத்திடலில், தன்னார்வ அமைப்பு சார்பில் நடைபெறும் 16வது ஆண்டு மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தபின் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கூறியதாவது:

கடந்த நிதிநிலை அறிக்கையில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் முக்கிய அறிவிப்பை வெளியிட்டு இருந்தார். இளம் பெண்களை புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீட்க, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் எடுக்காத முயற்சியை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் எடுத்தார்.

பல்வேறு நாடுகள் புற்றுநோயை தடுப்பூசி மூலம் குணப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில், தமிழகத்தில் புற்றுநோய் தொடர்பான திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. அதாவது, இந்தியாவில் முதல் முறையாகதமிழ்நாட்டில் 1 முதல் 14 வயதுடைய குழந்தைகளுக்கு புற்றுநோய் தடுப்பூசி இலவசமாக போடும் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

புற்றுநோய் தடுப்பூசிக்கா ரூ.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அனுமதி தற்போது வழங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கு இலவச தடுப்பூசி திட்டத்திற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிந்த பின்னர், இந்த திட்டம்அமலுக்குவரும். தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய் தடுப்பூசி போட ரூ.15,000 வரை செலவாகிறது. எனவே, புற்றுநோய் தடுப்பூசி அனைத்து தரப்பு மக்களும் செலுத்திக் கொள்ளும் வகையில், இந்த திட்டம் கொண்டு வரப்படுகிறது. விரைல் இலவச தடுப்பூசி திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.42.60 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார் அமைச்சர் சேகர்பாபு



சென்னை, அக்.28

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் ரூ. 42.60 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று (26.10.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு,வி,க,நகர் மண்டலம், வார்டு70, கபிலர் தெருவில் ரூ. 4.63 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 17 வகுப்பறைகள் கொண்ட சென்னைநடுநிலைப்பள்ளி கட்டடம் மற்றும் வார்டு64, சீனிவாசா நகரில் ரூ. 3.25 கோடி மதிப்பீட்டில் 12 வகுப்பறைகள் கொண்ட தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் புதியதாக கட்டப்பட்டு வரும் சென்னை தொடக்கப்பள்ளியின் புதிய கட்டடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், வார்டு69, ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.14.95 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்படவுள்ள பள்ளிக் கட்டடம் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு69, ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.19.77 கோடி மதிப்பீட்டில் நான்கு சக்கர வாகனம், இருசக்கரவாகனங்கள் நிறுத்துமிடம், உணவருந்தும்கூடம், திருமணநிகழ்வு கூடம், ஓய்வுவறை, உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய நல கூடத்தின் பணிகளைப் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அமைச்சர் வார்டு64, கணேஷ் நகரில் மீட்கப்பட்ட 20 சென்ட் நிலத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பகுதி மக்களிடம் கலந்துரையாடி அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கவுஷிக், மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் எ. நாகராஜன், ஸ்ரீதனி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4ம் வகுப்பு மாணவியிடம் சில்மிஷம்: பரோட்டா மாஸ்டர் போக்சோவில் கைது

கிருஷ்ணகிரி அக்.28

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகே உள்ள நரால்சந்தம்பட்டி பகுதியை சேர்ந்தவர் குணசீலன் (35 வயது). இவருக்கு மனைவியும், 2 குழந்தைகளும் உள்ளனர். இவர் ஓட்டல்களில் பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் நேற்று அப்பகுதியில் 9 வயதுடைய 4ம் வகுப்பு மாணவி தனியாக நடந்து வந்தாள்.

அப்போது அந்த மாணவியை தனியாக அழைத்துச் சென்று பட்டாசு வாங்கி தருவதாக கூறி பரோட்டா மாஸ்டர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. உடனே அங்கிருந்து அழுது கொண்டே சென்ற அந்த பள்ளி மாணவி வீட்டுக்கு சென்று நடந்த விவரங்களை கூறி உள்ளாள்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் இதுகுறித்து மத்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் பரோட்டா மாஸ்டர் குணசீலன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் இது தொடர்பாக விசாரணை நடத்திய போலீசார் அவரை கைது செய்தனர்.

# அண்ணாமலையார் மலை அடிவாரத்தில் ஆபத்தான நிலையில் உள்ள 30 டன் எடை கொண்ட ராட்சத பாறை அகற்றும் பணி தீவிரம்



திருவண்ணாமலை, அக்.28

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள அண்ணாமலையார் மலையில் கடந்த ஆண்டு டிசம்பர்மாதம் 1ந்தேதி பெஞ்ஜல் புயல் காரணமாக பெய்த கனமழையினால் பல்வேறு இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. இதில் மலைஅடிவாரத்தில்திருவண்ணாமலை வ.உ.சி. நகரில் உள்ள வீடுகளில் மண் சரிவினால் பாறை கற்களும், மண்ணும் புகுந்து சேதம் ஏற்பட்டது. இதில் ஒரு வீட்டில் இருந்த 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த ஆண்டுக்கான வடகிழக்கு பருவ மழை தொடங்கியது முதல் திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. தற்போது பெய்து வரும் மழையினால் அண்ணாமலையார் மலையில் மீண்டும் மண் சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றும், அதனை தடுக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் மாவட்ட கலெக்டர் தலைமையில் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்பு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் மலை அடிவாரத்தில் உள்ள வ.உ.சி. நகர் 5வது குடியிருப்பு பகுதிகளுக்கு அருகில் ஆபத்தான நிலையில் சுமார் 30 டன் எடை கொண்ட ராட்சத பாறை உள்பட சில பாறை கற்கள் இருப்பதாகவும், அதனை அகற்ற வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் திருச்சியை சேர்ந்த பாறைகள் உடைக்கும் வல்லுனர் குழுவினர் நேற்று திருவண்ணாமலைக்கு வந்து ஆபத்தான நிலையில் உள்ள சுமார் 30 டன் எடை கொண்ட ராட்சத பாறையில் துளையிட்டு அகற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

துளையிட்ட பகுதியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ‘ராக் கிராக்’ மருந்து பயன்படுத்தி பாறை வெடிக்க வைக்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த ராக் கிராக் மருந்தை பயன்படுத்தினால் பாறை வெடிக்கும் போது அருகிலுள்ள குடியிருப்புகளுக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்தனர். இந்த பணியில் 20க்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# சென்னையில் 2 ஆயிரம் சாலைகளில் பள்ளங்கள்; சீரமைப்பு பணி தீவிரம் மேயர் பிரியா பேட்டி




சென்னை, அக்.28

சென்னை ராயபுரத்தில் உள்ள பக்கிங்காம் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் மேயர் பிரியா ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர். இதன் பின்னர், நிருபர்களிடம் மேயர் பிரியா அளித்த பேட்டியின்போது, சென்னையில் மழை அதிகமாக பெய்யும் போது சாலைகளில் பள்ளம் ஏற்படும். ஒவ்வொரு வார்டு வாரியாக இதற்காக நிதி ஒதுக்கீடு செய்து பள்ளங்களை உடனடியாக சரிசெய்யுமாறு மாநகராட்சி சார்பில் அறிவுறுத்தியுள்ளோம்.

அதன்படி, 2 ஆயிரம் சாலைகளில் பள்ளங்கள் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்த சாலைகளில் உள்ள பள்ளங்களை சரிசெய்யும் பணி நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் புதிதாக சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

நடப்பாண்டில் 206 இடங்கள் தாழ்வான பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது. அங்கு மழைநீரை வெளியேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சி காலத்தில் ஒரு வாரம் கூட தண்ணீர் வடியாமல் அப்படியே தேங்கி நிற்கும் நிலை இருந்து வந்தது. ஆனால், இப்போது 24 மணி நேரத்தில் தண்ணீர் முழுமையாக வடிந்து விடுவதை பார்க்க முடிகிறது. 15 செ.மீ. மழை பெய்தால் மழைநீர் தேங்காமல் உடனடியாக வெளியேறிவிடும் வகையில் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

40 செ.மீ. மழை பெய்யும் போது தேங்கும் மழைநீர் மோட்டார் பம்புகள் மூலம் வெளியேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கூறினார். இந்த நிகழ்ச்சியில் துணை கமிஷனர் கட்டா ரவி தேஜா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் வீட்டின் பூட்டை உடைத்து நகைகள் திருட்டு: 2 பேர் கைது



தூத்துக்குடி

தூத்துக்குடி தங்க பரமேஸ்வரி காலனியைச் சேர்ந்த மகாலிங்கம் மகன் ராமகிருஷ்ணன் (வயது 57). இவர் தூத்துக்குடி அரசுபோக்குவரத்துகழகத்தில் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். இவரது மனைவி பூமாரி கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இவரது மகள் சக்திமாலா கோயம்புத்தூரில் ஒரு கல்லூரியில் படித்து வருகிறார். ராமகிருஷ்ணன் தனியாக வசித்து வந்தார்.

கடந்த 16ம் தேதி வீட்டை பூட்டிவிட்டு வேலைக்கு சென்றவர் பின்னர் 17ம் தேதி காலை வந்து பார்த்தபோது வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 23.5 சவரன் தங்க நகைகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றது தெரியவந்தது. அந்த நகைகளின் மதிப்பு ரூ.20 லட்சம் ஆகும். இந்த சம்பவம் குறித்து சிப்காட் காவல் நிலையத்தில் ராமகிருஷ்ணன் கொடுத்த புகாரின்பேரில், இன்ஸ்பெக்டர் சைரஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்.

விசாரணையில் வேலூர் மாவட்டம், குடியாத்தம் கார்த்திகைபுரம் கிராமத்தை சேர்ந்த மாணிக்கம் மகன் பாண்டியன்(38), தூத்துக்குடி முத்தையாபுரம் கிருஷ்ணாநகரை சேர்ந்த சத்தியசீலன் மகன் பேரின்பநாதன்(21) ஆகிய 2 பேரும் நகைகளை திருடியது தெரியவந்தது. இதனையடுத்து 2 பேரையும் போலீசார் கைது செய்து, 20 சவரன் நகைகளை மீட்டனர். பின்னர் கைது செய்யப்பட்ட 2 பேரும் தூத்துக்குடி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பேரூரணி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் 79.34% நீர் இருப்பு



சென்னை, அக்.28

சென்னைக்கு குடிநீர் வழங்கும் 5 ஏரிகளில் 79.34 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. சென்னையில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் தேவையை தீர்க்கும் வகையில், செம்பரம்பாக்கம், புழல், பூண்டி, சோழவரம் மற்றும் கண்ணன்கோட்டை ஆகிய 5 ஏரிகள் உள்ளன.

இந்நிலையில், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை, கடந்த 16ந்தேதி தொடங்கியது. இதனை முன்னிட்டு, பல்வேறு இடங்களிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் அணைகள், நீர்நிலைகள் விரைவாக நிரம்பி வருகின்றன.

இந்த 5 முக்கிய ஏரிகளிலும் மொத்தம் 79.34 சதவீதம் நீர் இருப்பு இருக்கிறது என தகவல் தெரிவிக்கின்றது. இந்த 5 ஏரிகளின் மொத்த கொள்ளளவான 11.757 டி.எம்.சி.யில், தற்போது 9.328 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது. இதன்படி, செம்பரம்பாக்கம் 79.7 சதவீதம், புழல் 81.51 சதவீதம், பூண்டி 80.84 சதவீதம், சோழவரம் 63.09 சதவீதம், கண்ணன்கோட்டை 87.8 சதவீதம் என்ற அளவில் நீர் இருப்பு உள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

28.10.2025

# மனைவியை கொன்றுவிட்டு போலீசிடம் தற்கொலை நாடகமாடிய கோவில் பூசாரி கைது



புதுடெல்லி, அக்.28

தலைநகர் டெல்லியில் உள்ள கேசவ்புரம் பகுதியை சேர்ந்தவர் தினேஷ் சர்மா. கோவில் பூசாரியான இவர் தனது மனைவி சுஷ்மா சர்மா(வயது 40) மற்றும் 11 வயது மகளுடன் வசித்து வந்தார். இதற்கிடையில், தினேஷ் சர்மாவுக்கும், அவரது மனைவிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.


இந்நிலையில், சம்பவத்தன்று இரவு சுஷ்மாவும், அவரது மகளும் வீட்டின் படுக்கையறையில் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு சென்ற தினேஷ் சர்மா, தனது மனைவியின் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தியுள்ளார். இதனால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு சுஷ்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதன் பின்னர் போலீசுக்கு தகவல் தெரிவித்த தினேஷ் சர்மா, தனது மனைவி தற்கொலை செய்து கொண்டதாக கூறி நாடகமாடியுள்ளார். ஆனால் போலீசாருக்கு அவரது பேச்சில் சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து அவரிடம் உரிய முறையில் விசாரணை நடத்தியபோது, தனது மனைவியை கொலை செய்ததை தினேஷ் சர்மா ஒப்புக்கொண்டார்.

இதனிடையே, சுஷ்மாவின் உறவினர்களிடம் போலீசார் இந்த சம்பவம் குறித்து தகவல் தெரிவித்தபோது, இரவு நேரத்தில் சாப்பாடு விஷயம் தொடர்பாக கணவன், மனைவிக்கு இடையே சண்டை ஏற்பட்டதாகவும், அதனால் கோபத்தில் தினேஷ் சர்மா தனது மனைவியை கொலை செய்து விட்டார் என்று கூறியுள்ளனர். ஆனால் சுஷ்மாவின் குடும்பத்தினர் இதனை ஏற்க மறுத்துள்ளனர்.

தினேஷ் சர்மாவுக்கு வேறு ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு இருந்துள்ளது என்றும், இது குறித்து ஏற்கனவே சுஷ்மா தங்களிடம் கூறியிருந்தார் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில்தான் தினேஷ் தனது மனைவியை கொலை செய்துள்ளார் என சுஷ்மாவின் உறவினர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். அதே சமயம், போலீசார் இந்த விவகாரம் குறித்து தீவிர விசாரணை நடத்த மறுக்கின்றனர் என்றும் சுஷ்மாவின் உறவினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உத்தரகாண்டில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 3.4 ஆக பதிவு




புதுடெல்லி, அக்.28

உத்தரகாண்டின் சமோலி பகுதியில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இரவு 6.47 மணியளவில் ரிக்டர் அளவில் 3.4 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது

5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 30.50 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 79.34 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும்இருக்கும்எனமுதலில்தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

# உத்தமபாளையம் அருகே பயங்கரமான விபத்து – ஒருவர் பலி

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பஸ் நிலையம் அருகே இன்று பயங்கரமான சாலை விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். அவரது அடையாளம் இதுவரை தெரியவில்லை.

விபத்து குறித்து தகவல் அறிந்த உடனே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் .

# இன்றைய ராசி பலன்கள் (28.10.2025)

மேஷம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

ரிஷபம்: உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

மிதுனம்: சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

கடகம்: வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

சிம்மம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

கன்னி: நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

துலாம்: புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

விருச்சிகம்: உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

தனுசு: வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

மகரம்: அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

கும்பம்: புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

மீனம்: மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# மராட்டியத்தில் பெண் டாக்டர் தற்கொலை வழக்கில் புதிய திருப்பம்



மும்பை, அக்.28

மராட்டியமாநிலம்பீட்மாவட்டத்தை சேர்ந்த பெண் டாக்டர் ஒருவர் ஒருவர் சதாரா மாவட்டம் பால்டன் பகுதியில் உள்ள அரசு மருத்துவ மனையில் பணியாற்றி வந்தார்.4 நாட்களுக்கு முன்புஅவர்தூக்குபோட்டுதற்கொலை செய்துகொண்டார்.தனதுமரணத்துக்கு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கோபால் பதானே காரணம் எனவும், அவர் 4 முறைதன்னைபாலியல்வன்கொடுமை செய்தார்எனவும்தனதுஉள்ளங்கையில் குறிப்பு எழுதியுள்ளார்.

பெண் டாக்டர் தற்கொலை செய்து கொண்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வீட்டு உரிமையாளர் பிரசாந்த் பங்கர், சப் இன்ஸ்பெக்டர் பதானே கோபால் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு பெண் டாக்டர் 4 பக்க கடிதத்தை எழுதி வைத்துள்ளார். மேலும் மராட்டிய எம்.பி. ஒருவருக்கு இதில் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே பெண் டாக்டர் தற்கொலை வழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. போலியான பிரேத பரிசோதனை அறிக்கை வெளியிடப்பட்டதாக பெண் டாக்டரின் தாயார் குற்றம் சாட்டியுள்ளார். பிரேத பரிசோதனையைமாற்றடாக்டர்ஒருவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இதுகுறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கேரளாவில் 2½ மாத ஆண் குழந்தையை ரூ.50 ஆயிரத்திற்கு விற்க முயற்சி: தந்தை உள்பட 3 பேர் கைது

கோட்டயம், அக்.28

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் கும்மணம் பகுதியில் தனியார் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இங்கு அசாம் மாநிலத்தை ஒரு தம்பதி வேலை பார்த்து வந்தனர். இவர்களுக்கு பிறந்து 2½ மாதமே ஆன ஆண் குழந்தை உள்ளது.

இதேபோல் ஈராட்டுப்பேட்டையை சேர்ந்த தனியார் தொழிற்சாலை ஒன்றில் உத்தரபிரதேசத்தை சேர்ந்த தம்பதி வேலை பார்த்து வந்தனர். இந்த தம்பதிக்கு குழந்தை இல்லை. இதனால் அவர்கள் குழந்தையை தத்தெடுக்க முடிவு செய்தனர். இதைத்தொடர்ந்து அவர்களுக்கு அறிமுகமான ஒருவர், தனக்கு தெரிந்த கும்மணம் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வேலை பார்க்கும் அசாம் மாநில தம்பதியிடம் ஆண் குழந்தை உள்ளது, அவர்களிடம் பேசி பணம் கொடுத்து அந்த குழந்தையை வாங்கி கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

இதையடுத்து அந்த நபர், அசாம் மாநில தம்பதியிடம் பேசி குழந்தையை பணம் கொடுத்து வாங்க முயற்சித்தார். ஆனால் அதற்கு குழந்தையின் தாய் சம்மதம் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவரது கணவர்,

குழந்தையை விற்க முடிவு செய்தார். இதனால் கணவன் மனைவி இடையே தகராறு ஏற்பட்டு வந்தது. தொடர்ந்து ரூ.50 ஆயிரத்திற்கு குழந்தையை விற்க அதன் தந்தை பேரம் பேசினார். பின்னர் அதற்கு முன் பணமாக ரூ.1,000த்தைகுழந்தையின் தந்தை பெற்றுக்கொண்டார்.

இதையறிந்த குழந்தையின் தாய், கணவருடன் மேலும் தகராறு செய்ததுடன் நடந்த சம்பவங்களை தன்னுடன் வேலை பார்க்கும் சக தொழிலாளர்களிடம் கூறினார். இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள், உடனடியாக குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புக்கு தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து கோட்டயம் கிழக்கு போலீசாரிடம் புகார் அளிக்கப்பட்டது.

இதையடுத்து கோட்டயம் போலீசார் விசாரணை நடத்தி, ரூ.50 ஆயிரத்திற்கு 2½ மாத ஆண் குழந்தையை விற்பனை செய்ய முயன்ற தந்தை, இடைத்தரகராக செயல்பட்ட நபர் மற்றும் அந்த குழந்தையை விலைக்கு வாங்க முயன்ற உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த தொழிலாளி என 3 பேரையும் கைது செய்தனர். தொடர்ந்து அவர்கள் 3 பேர் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்து மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நடிகர் சிவகுமாருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த கமல்ஹாசன்



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகரான சிவகுமார் இன்று தனது 84வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். ரசிகர்கள் மற்றும் திரைபிரபலங்கள் பலர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 1965 ஆம் ஆண்டு வெளியான காக்கும் கரங்கள் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகர் சிவகுமார். 1967ல் வெளியான கந்தன் கருணை படத்தின் மூலம் மக்கள் மத்தியில் பிரபலமானார். அரங்கேற்றம், சொல்லத்தான் நினைக்கிறேன், தங்கத்திலே வைரம், மேல்நாட்டு மருமகள் என பல படங்களில் நடிகர் சிவகுமார் கமலுடன் இணைந்து நடித்துள்ளார். இவர் கடைசியாக, 2001ல் வெளியான அஜித், ஜோதிகாவின் பூவெல்லாம் உன் வாசம் படத்தில் நடித்திருந்தார். தொடர்ந்து, சித்தி, அண்ணாமலை என தொலைகாட்சித் தொடர்களில் நடித்தார். நடிப்பை நிறுத்திவிட்ட சிவகுமார், கம்பராமாயணம், திருக்குறள் என சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

இந்நிலையில் நடிகர் சிவகுமாருக்கு கமல்ஹாசன் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், “சிவகுமாரண்ணே, 84 மார்க் போதாது... நூறுதான் நல்ல மார்க்” என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# விஜே சித்து இயக்கும் “டயங்கரம்” படப்பிடிப்பு தொடக்கம்



தமிழ் யூ டியூபர்களி ல் அதி கப்படியான ரசிகர்களை கொண்டவர்களில் ஒருவர் வி.ஜே.சித்து. நிகழ்ச்சித் தொகுப்பாளர், பிராங் ஷோ என கரியரைத் தொடங்கிய விஜே சித்து தற்போது ‘சித்து வி ளாக்ஸ்’ என்கிற யூடியூப் சேனலை நடத்தி வருகிறார். சமீப த்தில் வெளியான 'டிராகன்' படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அதில் இவரது நடிப்பு பாராட்டப்பட்டது.

அதனை தொடர்ந்து தமிழ் சினிமாவில் வி.ஜே.சித்து இயக்குநராக அறிமுகமாகவுள்ளார். வேல்ஸ் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் சார்ப்பில் ‘டயங்கரம்’ படத்தை தயாரிப்பாளர் ஐசாரி கணேஷன் தயாரிக்கிறார். இந்த படத்தினை எழுதி, இயக்கி, ஹீரோவாகவும் நடிக்கவுள்ளார் விஜே சித்து. ‘டயங்கரம்’ படத்தின் டைட்டில் லுக் போஸ்டர், புரோமோ வீடியோ வெளியாகி வைரலானது.

இந்த நிலையில், ‘டயங்கரம்’ படத்தின் படப்பிடிப்பு பணிகள் பூஜையுடன் இன்று தொடங்கியுள்ளது.

# மகாபாரதப் போரில் கர்ணன் பாண்டவர்களுடன் சேர்ந்திருந்தால் ... இயக்குநர் ஹனு ராகவபுடி

தெலுங்கில் முன்னணி நடிகராக வலம் வரும் பிரபாஸ் ‘பாகுபலி’ படத்திற்குப் பிறகு பான் இந்தியா நடிகராக கொண்டாடப்படுகிறார்.’ராதே ஷ்யாம்’, ‘ஆதிபுருஷ்’, ‘சலார்’ எனத் தொடர்ந்து இவர் நடித்த பான் இந்திய படங்கள் பெரிதாக வரவேற்புப் பெறவில்லை. இப்போது பான் வேர்ல்ட் படமாக உருவாகி வரும் ‘கல்கி 2898 ஏடி’ 2ம் பாகத்தில் நடித்து வருகிறார். பிரபாஸ் நடிப்பில் அடுத்து திரையரங்குகளில் வெளியாக இருக்கும் படம் ‘தி ராஜா சாப்’. இப்படம் பொங்கலை முன்னிட்டு ஜனவரி 10ம் தேதி வெளியாக உள்ளது.

பிரபாஸ் அடுத்து, சீதா ராமம் பட இயக்குனர் ஹனு ராகவபுடி இயக்கத்தில் ஒரு படத்தில் நடித்து வருகிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் கீழ் நவீன் யெர்னேனி மற்றும் ரவி ஷங்கர் இந்த பிரமாண்டமான படத்தைத் தயாரிக்கிறார்கள். சமூக ஊடக பிரபலம் இமான்வி கதாநாயகியாக நடிக்கிறார். விஷால் சந்திரசேகர் இசையமைக்கிறார். ஹனு ராகவபுடி இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கும் படம் ‘பௌஜி’. இந்த பான்இந்தியா படத்தின் டைட்டில் போஸ்டர் சமீபத்தில் வெளியானது. அதில் சமஸ்கிருத ஸ்லோகங்கள் இடம்பெற்றுள்ளன. இது சமூக வலைதளங்களில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டது. இந்நிலையில் இயக்குநர் ஹனு ராகவபுடி இதுகுறித்து விளக்கம் அளித்துள்ளார்.

இயக்குநர் ஹனு ராகவபுடி “நாங்கள் திட்டமிட்டுதான் சமஸ்கிருத ஸ்லோகங்களை பயன்படுத்தினோம். போர் வீரனைப் பற்றிய இந்தக் கதைக்கு அது ஆழமான பொருள் தருவதால் பயன்படுத்தியுள்ளோம். மற்றபடி இது புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டதல்ல. பகவத்கீதையிலிருந்து நாங்கள் எடுத்துக் கொண்டது வெறும் தத்துவ ரீதியான ஊக்கம் மட்டுமே. ‘பௌஜி’ என்பது மனித உணர்வுகள், தேசப்பற்று மற்றும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்த சமூகஅரசியல் பதற்றங்களை மையமாகக் கொண்ட அழுத்தமான அதிரடி டிராமா. இன்றும் உலகளவில் அதேபோல் எதிரொலிக்கும் உண்மைகளை இப்படம் பேசும். படத்தில் பிரபாஸ் ஒரு பெரிய வீரராக நடிக்கிறார்.

‘கர்ணன் பாண்டவர்களுடன் சேர்ந்து இருந்தால் மகாபாரதப் போர் எப்படி மாறியிருக்கும்?’ என்ற சிந்தனை தான் இந்தக் கதையின் மையக் கரு. பிரிட்டிஷ் கால பின்னணியில் நடக்கும் இந்தக் கதையில் பிரபாஸ் பல பரிமாணங்களுடன் அசத்தலான நடிப்பை வெளிப்படுத்தி வருகிறார். அவருடன் மீண்டும் இணைந்து பணியாற்ற ஆவலாக இருக்கிறேன்” என்றார்.

# மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட்: அரையிறுதியில் இருந்து விலகும் முன்னணி வீராங்கனை..?




மகளிர் உலகக்கோப்பை தொடரில் மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.ஒய்.பட்டீல் ஸ்டேடியத்தில் நேற்று அரங்கேறிய 28வது மற்றும் கடைசி லீக்கில் இந்தியா வங்காளதேசம் அணிகள் மோதின. இதில் டாஸ் ஜெயித்த இந்தியா பந்து வீச்சை தேர்வு செய்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டத்தை தொடங்குவதில் 2 மணி நேரம் தாமதம் ஆனது. இதனால் ஆட்டம் 43 ஓவராக குறைக்கப்பட்டு தொடங்கப்பட்டது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த வங்காளதேச அணி 12.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 39 ரன்கள் எடுத்திருந்தபோது மறுபடியும் மழை குறுக்கிட்டது. இதனால் போட்டி 27 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக மாறியது. தொடர்ந்து ஆடிய வங்காளதேசம் 27 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 119 ரன்கள் எடுத்தது. இந்திய தரப்பில் சுழற்பந்து வீச்சாளர்கள் ராதா யாதவ் 3 விக்கெட்டும், ஸ்ரீசரணி 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் ‘டக்வொர்த் லீவிஸ்’ விதிப்படி இந்தியாவுக்கு 27 ஓவர்களில் 126 ரன்கள் எடுக்க வேண்டும் என இலக்கு மாற்றியமைக்கப்பட்டது. அதை நோக்கி ஆடிய இந்திய அணி 8.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 57 ரன்கள் எடுத்திருந்த போது மீண்டும் மழை பெய்தது. அப்போது ஸ்மிர்தி மந்தனா 34 ரன்களுடனும், அமன்ஜோத்கவுர் 15 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். மழைநீடித்ததால், அத்துடன் ஆட்டம் கைவிடப்பட்டது. நடப்பு தொடரில் பாதியில் ரத்தான 6வது ஆட்டம் இதுவாகும்.

முன்னதாக இந்த ஆட்டத்தில் பீல்டிங்கின்போது இந்திய நட்சத்திர தொடக்க வீராங்கனை பிரதிகா ராவலுக்கு வலதுகணுக்காலில்காயம்ஏற்பட்டது. இதையடுத்துஅவர்கைத்தாங்கலாகவெளியேஅழைத்துசெல்லப்பட்டார்.

இவர் இந்த ஆட்டத்தில் பேட்டிங் செய்யவரவில்லை. இந்நிலையில், பிரதிகா ராவல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ள மாட்டார் என தகவல் வெளியாகி உள்ளது. அவரது காயம் குணமடைய சில வாரங்கள் ஆகும் என்பதால் அவர் கலந்து கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளது.

நடப்பு தொடரில் பிரதிகா ராவல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அத்துடன் நியூசிலாந்துக்கு எதிரான கடந்த ஆடத்தில் இவர் சதமடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதிகா ராவல் காயம்: இந்திய அணிக்கு புதிய தொடக்க வீராங்கனை மிதாலி ராஜ் யோசனை




மகளிர் உலகக்கோப்பை தொடரில் மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.ஒய்.பட்டீல் ஸ்டேடியத்தில் நேற்று அரங்கேறிய 28வது மற்றும் கடைசி லீக்கில் இந்தியா வங்காளதேசம் அணிகள் மோதின. இதில் டாஸ் ஜெயித்த இந்தியா பந்து வீச்சை தேர்வு செய்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டத்தை தொடங்குவதில் 2 மணி நேரம் தாமதம் ஆனது. இதனால் ஆட்டம் 43 ஓவராக குறைக்கப்பட்டு தொடங்கப்பட்டது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த வங்காளதேச அணி 12.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 39 ரன்கள் எடுத்திருந்தபோது மறுபடியும் மழை குறுக்கிட்டது. இதனால் போட்டி 27 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக மாறியது. தொடர்ந்து ஆடிய வங்காளதேசம் 27 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 119 ரன்கள் எடுத்தது. இந்திய தரப்பில் சுழற்பந்து வீச்சாளர்கள் ராதா யாதவ் 3 விக்கெட்டும், ஸ்ரீசரணி 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் ‘டக்வொர்த் லீவிஸ்’ விதிப்படி இந்தியாவுக்கு 27 ஓவர்களில் 126 ரன்கள் எடுக்க வேண்டும் என இலக்கு மாற்றியமைக்கப்பட்டது. அதை நோக்கி ஆடிய இந்திய அணி 8.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 57 ரன்கள் எடுத்திருந்த போது மீண்டும் மழை பெய்தது. அப்போது ஸ்மிர்தி மந்தனா 34 ரன்களுடனும், அமன்ஜோத் கவுர் 15 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். மழை நீடித்ததால், அத்துடன் ஆட்டம் கைவிடப்பட்டது. நடப்பு தொடரில் பாதியில் ரத்தான 6வது ஆட்டம் இதுவாகும்.

முன்னதாக இந்த ஆட்டத்தில் பீல்டிங்கின்போது இந்திய நட்சத்திர தொடக்க வீராங்கனை பிரதிகா ராவலுக்கு வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் கைத்தாங்கலாக வெளியே அழைத்து செல்லப்பட்டார்.

இவர் இந்த ஆட்டத்தில் பேட்டிங் செய்யவரவில்லை. இந்நிலையில், பிரதிகா ராவல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ள மாட்டார் என தகவல் வெளியாகி உள்ளது. அவரது காயம் குணமடைய சில வாரங்கள் ஆகும் என்பதால் அவர் கலந்து கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளது.

இந்நிலையில் உலகக் கோப்பை அரையிறுதியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில், பிரதிகா ராவல் காயம் காரணமாக விளையாட முடியாவிட்டால், ஹர்லின் டியோல், ஸ்மிரிதி மந்தனாவுடன் தொடக்க வீரராக விளையாடலாம் என முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ் யோசனை கூறியுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.